17. (அ) குறுந்தொகை வெளிப்படுத்தும் தலைவியின் துயரினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஐங்குறுநூற்றின் வேட்கைப்பத்து செய்திகளைத் தொகுத்தெழுதுக.

18. (அ) அகநானூற்றுத் தோழிகூற்றுப் பாடல்கள் உணர்த்தும் செய்திகளைக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) "அஞ்சிவது அஞ்சா அறனிலி அல்லன்" எனத் தலைவி தோழியை மறுத்துரைப்பதை விவரிக்க.

19. (அ) ஔவையார் பாடல்கள் மூலம் அறியலாகும் வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) வேள்பாரி குறித்துக் கபிலர் கூறுவனவற்றைக் கட்டுரைக்க.

20. (அ) பேரெழில் வாழ்க்கை என்னும் பாட்டு செங்குட்டுவன் குறித்துக் கூறுவனவற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) வெருவரு புனல்தார் என்ற பாட்டு செங்குட்டுவனின் வீரத்தை எங்ஙனம் மொழிகின்றது என்பதைக் கட்டுரைக்க.

———————



**S.No. 2652** **NSLT 7**

(For candidates admitted from 2019–2020 onwards)

B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2023.

Part III — தமிழ் இலக்கியம் — Major

சங்க இலக்கியம்

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் எது?

2. பட்டினப்பாலை - பெயர்க்காரணம் கூறுக.

3. "எறும்பி யளையிற் குறும்பல் சுனைய" என்ற குறுங்தொகை பாடலில் அளை என்பதன் பொருள் யாது?

4. ஐங்குறுநூற்றில் மருதத்திணைப் பாடல்களைப் பாடியவர் யார்?

5. அகநானூறு எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது? அவை யாவை?

6. பரி போல் கால்களால் பரிந்து நடைபோடும் பண்ணிசைப் பாடல்களைக் கொண்ட நூல் எது?

7. புறநானூற்றின் வேறு பெயர்கள் யாவை?

8. புறநானூறு வழி அறியலாகும் செய்திகள் யாவை?

9. பதிற்றுப்பத்து எம்மன்னர்களைப் பற்றி பாடிய பாடல்களின் தொகுப்பாகும்?

10. பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்து யாரால் பாடப்பெற்றது?

பகுதி ஆ — (5 × 6 = 30)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) "பாடும் இமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் செய்தி யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்புகளை எழுதுக.

12. (அ) "நாணும் விட்டேம் அலர்க இவ் ஊரே" என்ற பாடலில் அறிவுடை நம்பி கூறுவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'மேவன செய்யும், தன் புதல்வன் தாய்க்கே' எனக் காதல் பரத்தை கூறுவதை விளக்குக.



13. (அ) வினை முற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகனுக்கு உரைப்பதாகக் குடவாயில் கீரத்தனார் கூறுவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) முருகனின் புகழ்போல் நாங்கள் வழிபடும் நாள்கள் பெருக வேண்டும் எனப் பரிபாடல் கூறுவதை எழுதுக.

14. (அ) ஔவையார் - ஆசிரியர் குறிப்பெழுதுக.

(அல்லது)

(ஆ) புறநானூற்றின் சிறப்புகளைப் பட்டியலிடுக.

15. (அ) பரணர் - ஆசிரியர் குறிப்பெழுதுக.

(அல்லது)

(ஆ) காட்சி வாழ்த்து என்றால் என்ன? விளக்குக.

பகுதி இ — (5 × 10 = 50)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

16. (அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்தியை விவரித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பட்டினப்பாலை வழி அறியலாகும் கரிகால் பெருவளத்தானின் சிறப்புகளைக் கட்டுரைக்க.